# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.715/2023**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **போதுமணி** | Caste | : |
| Father 's Name | : **வெற்றிவேல்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை. 1 முதல் 4 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**28.04.2025**

**முதல் விசாரணை**

நான் சோழவந்தான் முள்ளிபல்லம் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து இடத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள். 4 வது எதிரி துரைபாண்டியன் 1 வது எதிரியின் தம்பி மகன் ஆவார். அவரை எனக்கு தெரியாது. சின்னவடகரை அருகே கடந்த 2023 வது வருடம் எனது மாமனாருக்கு சொந்தமான 3 செண்ட் இடத்தை நான் கிரையத்துக்கு வாங்கினேன். அந்த இடத்தை நான் வாங்கியதில் இருந்து எதிரிகள் என்னிடம் பிரச்சினை செய்து கொண்டிருந்தார்கள். எனது மாமனார் இடத்திற்கு அருகே 20 அடி பாதையை தாண்டி எதிரிகளுக்கு இடம் உள்ளது. எதிரிகள் பிரச்சினை செய்ததால் நான் எனது இடத்தை தகர செட் போட்டிருந்தேன். பின்பு அதே 2023 வது வருடம் தேதி மாதம் நினைவு இல்லை. ஆஜர் எதிரிகள் நான் போட்டிருந்த தகர செட்டை கல்லால் அடித்து நொறுக்கி அருவாளால் கொத்தி சேதப்படுத்திருந்தார்கள். நான் யார் செய்தது என்று விசாரித்தபோது எனது இடத்திற்கு அருகே குடியிருக்கும் கிருஷ்ணன் என்பவர் எதிரிகள் தான் மேற்படி தகரத்தை சேதப்படுத்தியதாக கூறினார்கள். அதை பற்றி நான்

எதிரிகளிடம் கேட்டதற்கு எதிரிகள் என்னை வித்தியாசமான வார்த்தைகளால் திட்டினார்கள். எதிரிகள் 4 பேரும் சேர்ந்து என்னை அடித்துக் கீழே தள்ளி தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். மேற்படி இடத்திற்கு நீ வந்தாயானால் உன்னை கொலை செய்துவிடுவோம் என மிரட்டினார்கள். அங்கு இருந்த ஈஸ்வரன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் சேர்ந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். நான் சம்பவம் பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சோழவந்தான் முள்ளிபல்லம் கிராமத்தில் இன்றுவரை குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். என் நிலத்தில் போட்டிருந்த வேலியை யார் சேதப்படுத்தினார்கள் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. கிருஷ்ணனும் நானும் பக்கத்து பக்கத்து இடத்துக்காரர்கள் என்றால் சரிதான். கிருஷ்ணன் அங்கேயே குடியிருக்கிறார் என்றால் சரிதான். 1வது எதிரி பாண்டிக்கு என் இடத்திற்கு அடுத்து உள்ள பாதையை அடுத்து உள்ள வீடு என்றால் சரிதான். அதனால் தான் அந்த பாதையை தாண்டி வந்ததால் தான் என் வீட்டிற்கு வர முடியும் என்றால் சரிதான். பாதையை அவர்கள் அடைத்து வைத்ததற்கான ஆதாரத்தை நான் தரவில்லை. சாட்சி கிருஷ்ணனுக்கு வேறு பக்கம் பாதை உள்ளதா என்றால் சரிதான். கிருஷ்ணன் என் வீட்டிற்கு முன்பு உள்ள பாதையை பயன்படுத்த முடியாது. என் தங்கை வழியே சாட்சி 3 கிருஷ்ணன் சொந்தக்காரர் ஆவார். எதிரி பாண்டி என் வீட்டிற்கு முன்பு உள்ள பாதை அவருக்கும் சொந்தமானது என்றால் சரிதான். நான் பாண்டி வீட்டிற்கு சென்று கேட்ட போது தான் சம்பவம் என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது தான் உண்மை. எனது தகர செட்டை சேதப்படுத்தியதற்கு உரிய புகைப்படத்தை போலிசாரிடம் ஒப்படைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரிகள் சேதப்படுத்திய பொருளுக்கான மதிப்பை எழுதிதரவில்லை. சேதப்படுத்திய அனைத்து விபரங்களையும் போலிசார் குறித்துள்ளார். புகாரை நான் எழுதவில்லை. வேறு ஒரு நபர் நான் சொல்ல சொல்ல எழுதினார். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் சம்பவம் நடந்த நாளன்று மாலை 6 மணிக்கு நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மறுநாள் காலை 10 மணிக்கு போலிசார் வந்து சம்பவயிடத்தை பார்த்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று

புகார் கொடுக்கவில்லை என்றும் மறுநாள் மதியம் 2 மணிக்கு தான் புகார் கொடுத்தேன் என்றால் அது சரியல்ல. சம்பவம் நடந்த 1 மணி நேரத்தில் நான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் இடத்தை வாங்கியதோடு நான் பாதைக்கு விட்டிருந்த இடத்தையும் ஆக்கிரமித்து எதிரிகளின் போக்குவரத்துக்கு இடஞ்சல் செய்ததால் எதிரிகள் ஆக்கிரமிரப்பு அகற்றுமாறும் இல்லையெனில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க போவதாக சொன்னதால் நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக மிகைப்படுத்தி எதிரிகளின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் உங்கள் மீது எந்த வன்முறையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் பெண்மைக்கு கன்னிய குறைவு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.715/2023**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பாண்டிஸ்வரன்** | Caste | : |
| Father 's Name | : **ராமசந்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை. 1 முதல் 4 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**28.04.2025**

**முதல் விசாரணை**

நான் சோழவந்தான் முள்ளிபல்லம் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் பணி செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 4 வது எதிரி துரைபாண்டியை எனக்கு தெரியாது. சின்னவடகரை அருகே அ.சா.1 , 3 செண்ட் இடம் வாங்கியிருந்தார். அ.சா.1 அவரது மாமனார் இடத்தை 2023 வது வருடம் கிரையமாக வாங்கியிருந்தார். எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் அ.சா.1 வாங்கிய இடத்தில் எதிரிகள் செங்கல் மற்றும் ஆடுகளை கட்டியிருந்தததை அகற்றி சொன்னதின் பேரில் பிரச்சினை ஆகிவிட்டது. எனவே நான் அ.சா.1 ன் 3 செண்ட் இடத்தில் நான் தகர செட்டால் வேலி போட்டேன். அப்போது எதிரிகள் எதற்காக இங்கு வேலி போடுகிறீர்கள் என சொல்லி எனது சித்தி அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டினார்கள். எதிரிகள் எனது சித்தியை அடித்து மல்லுக்கட்டி தகராறு ஆகிவிட்டது. நானும் அங்கு பக்கத்தில் குடியிருக்கும் கிருஷ்ணன் என்பவரும் சண்டையை விலக்கிவிட்டோம். பின்பு சம்பவம் எனது சித்தி அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் இடம் வாங்குவதற்கு முன்பு இருந்தே சண்டை என்றால் சரிதான். அனைத்து சண்டைகளிலும் நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நாங்கள் முன்பு நடந்த சண்டைகளுக்கு எல்லாம் புகார் கொடுக்கவில்லை. செட் போடுவதற்கு முன்பாக செங்கல் என் சித்தியின் இடத்திற்குள் இருந்ததை எடுக்கும் போது சண்டை வந்தது. அப்போது என் சித்தி காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றார். புகார் கொடுத்தவுடன்போலிசார் வந்துவிட்டார்கள். பின்பு அன்று இரவு போலிசார் என் சித்தியை புகார் கொடுக்க வரச்சொன்னார்கள். நானும் உடன் சென்றேன். அப்பொழுது புகார் கொடுத்தார்கள். அதுசம்பந்தமாக தான் நான் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரிதான். அதன் பின்பு ஒரு வாரம் கழித்து தான் நான் செட் போட்டுக் கொடுத்தேன். அதன் பின்பு என் சித்தி செட்டை போட்டு ஒரு வாரம் கழித்து வந்தபோது நானும் அ.சா.1 சித்தியும் வந்தபோது சேதாரமாகி இருந்த செட்டை பார்த்து என் சித்தி எதிரிகளின் வீட்டிற்கு போய் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டார். அப்போது நடந்த சம்பவத்திற்கு திரும்பவும் சென்று புகார் கொடுத்தார். சாட்சி கிருஷ்ணன் என் சித்தப்பா. எங்கள் இடத்திற்கு அருகிலேயே குடிருக்கிறார் என்றால் சரிதான். போலிசார் சேதாரம் ஆகியிருக்கிறாதா என்று கேட்டார்கள். ஆம் என்று சொன்னேன். எவ்வளவு சேதாரம் என்று கேட்கவில்லை. நான் சொல்லவில்லை. என் சித்திக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னாலும் நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.715/2023**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணன் | Caste | : |
| Father 's Name | : தவுடன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை. 1 முதல் 4 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**28.04.2025**

**முதல் விசாரணை**

நான் சின்னவடகரையில் குடியிருந்து வருகிறேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 போதுமணியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் 3 பேரையும் எனக்கு தெரியும். 4 வது எதிரி துரைபாண்டியை எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு அருகே அ.சா.1 போதுமணி என்பவர் இடம் வாங்கியுள்ளார். மேற்படி இடத்தை காண்பித்து லோன் பெறுவதற்காக முயற்சித்தார். அ.சா.1 ன் இடத்திற்கும் எனது வீட்டிற்கும் அருகே அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அ.சா.1 வாங்கிய இடத்திற்கு எதிர்புறத்தில் 20 அடி ரோடு உள்ளது. மேற்படி ரோட்டின் கிழக்கு பக்கத்தில் எதிரிகளின் வீடு உள்ளது. அ.சா.1 மேற்கண்ட இடத்தை வாங்குவதற்கு முன்பு எதிரிகள் 20 அடி ரோடு மற்றும் அதன் அருகே உள்ள அரசு புறம்போக்கு நிலத்தையும் உபயோகித்து வந்தார்கள். அ.சா.1 2023 வது வருடம் மேற்படி இடத்தை கிரையம் வாங்கினார். அ.சா.1 நான் மேற்படி கிரையம் வாங்கிவிட்டேன். எதிரிகள் அவரது இடத்தில் வைத்திருந்த செங்கல் மற்றும் சிறு சிறு சாமான்களை அப்புறப்படுத்துமாறு கூறினார். எதிரிகள் அதற்கு மறுத்தார்கள். இதுசம்பந்மாக எதிரிகள் வி.ஏ.ஓ உடன் புகார் சொல்லி இடத்தை அளந்தார்கள். அளவீடு

செய்து அ.சா.1 வாங்கிய இடத்தில் எதிரிகள் வரக்கூடாது என சொல்லி தகர செட்டால் வேலி அமைத்தார்கள். 2023 வது வருடம் 5 வது மாதத்தில் மேற்படி தகர செட்டை ஆஜர் எதிரிகள் சேதப்படுத்திவிட்டார்கள். அப்போது அ.சா.1 அந்த இடத்திற்கு வந்த போது தகர செட் சேதமாகி இருந்ததை பார்த்து யார் செய்தது என்று என்னிடம் விசாரித்தார். நான் எதிரிகள் தான் அவ்வாறு செய்தார்கள் என்று கூறினேன். அ.சா.1 எதிரிகளிடம் எதற்காக இவ்வாறு செய்கிறீர்கள் என கேட்டற்கு இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. எதிரிகள் அ.சா1 ஐ அசிங்கமாக திட்டினார்கள். எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 ஐ அடித்தார்கள். நான் இரண்டு பேரையும் விலக்கிவிட்டேன். அ.சா.1 அடி வாங்கியதில் அவரது சேலை கிழிந்ததால் காவல் நிலையம் செல்வதாக கூறிச்சென்றார். அவர் கொடுத்த புகாரின் பேரில் போலிசார் வழக்கு பதிவு செய்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி**

நான் 2020 வது வருடம் வீடு கட்டினேன் என்றால் சரிதான். நான் வீடு கட்டும் போது எதிரிகள் தான் என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள புறம்போக்கு நிலத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் வீடு கட்டும்போது எதிரிகள் என்னுடன் எந்த தகராறும் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் புறம்போக்கு இடத்தில் ஆடுகள் கட்டி வளர்த்து வந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1 வாங்கிய நிலம் பட்டா நிலம் தான். புறம்போக்கு நிலத்தில் அ.சா1 க்கு எந்த பாத்தியமும் இல்லை. போதுமணி பணம் கட்டி சர்வேயரை அழைத்து அளந்தார். அப்போது போதுமணியின் இடத்தை தவிர புறம்போக்கு இடத்தை சர்வேயர் எதையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கும் போதுமணி வீட்டிற்கு கிழக்கு பக்கமும் புறம் போக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். செட்டில் சேதாரமாகி இருந்ததை போலிசார் போட்டோ எடுத்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே போதுமணி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் சண்டையை விலக்கியவுடன் அவர்கள் நேராக காவல் நிலையம் சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த 3 நாள் கழித்து தான் போதுமணி புகார் கொடுத்ததாக போலிசார் சொல்லியிருந்தார்கள் என்றால் அது தவறு. சம்பவத்தன்றே அ.சா.1 புகார் கொடுத்து போலிசார் சம்பவயிடத்திற்கு வந்தார். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 பக்கத்து

இடத்துக்காரர்ர் என்பதாலும் எனக்கு சொந்தக்காரர் என்பதாலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக அ.சா.1க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.